ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி



வேணு : 1 செப்டம்பர் 1995 கானம் : 3

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்
# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 1 செப்டம்பர் 1995 கானம் : 3

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மாற்றலுக்கு மாற்றல் | 4 |
| 3. | ஸ்ரீ குருஜி -1 | 8 |
| 4. | யுக தர்ம ஸ்தாபகர்கள் -2 | 10 |
| 5. | ஸங்கீர்த்தன ஸப்தாகம் - ஒரு கண்ணோட்டம் | 13 |
| 6. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து -3 | 22 |
| 7. | செய்திகள் | 29 |
| 8. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |




'ஸங்கீர்த்தன ஸப்தாஹம்' வைபவத்தில் ஸ்ரீ ராதா கல்யாண நிகழ்ச்சி.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

*ராகம்: பூர்வி கல்யாணி* *தாளம்: ஆதி*

*பல்லவி*

வேணு கோபாலம் ப்ரணமாமி

*அனு பல்லவி*

மதுர வேணு கானேன
மங்களம் ஸர்வத்ர ஸதா குர்வந்தம் (வேணு)

*சரணம்*

கோ மண்டல மத்யே ஸுந்தர பாலகம்
கோபி ஹ்ருதய ரஞ்ஜன புவன ஸுந்தரம்
ப்ரும்ம கர்வ பஞ்ஜன பாவன சாரித்ரம்
முரளீதர ஹ்ருதய த்யான ஸ்வரூபம் (வேணு)

## அட்டைப்பட விளக்கம்

*மேல மாம்பலம் ஸ்ரீ அயோத்யா மண்டபத்தில் ஸ்ரீ குருஜி முரளீதர ஸ்வாமிகள் மிஷன் ஏற்பாடு செய்திருந்த 'ஸங்கீர்த்தன ஸப்தாஹம்' வைபவத்தில், ராஸ் கானம் நிகழ்ச்சிக்கு, ஹைதராபாத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஈஸ்வர பிரசாத் அபிநயிக்கும் காட்சி.*

# மாற்றலுக்கு மாற்றல்

நான் வேலை பார்த்துவரும் தனியார் கம்பெனியில் என்னை திடீரென்று கோவைக்கு டிரான்ஸ்பர் செய்யப் போகிறார்கள் என்று கேட்டவுடன் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. குருநாதரை இனிமேல் தினமும் பார்க்க முடியாது போயிடுமோ என்று மிகவும் வருத்தமாக இருக்கும் நிலையில் உடனே குருநாதரைப் பார்க்க அப்பொழுதே - 'எனக்கு முக்கியமான (பர்ஸனல்) வேலை இருக்கிறது' என்று லீவ் கேட்டு கிளம்பினேன். குருநாதர், பெருமாளுக்கு திருமஞ்சனம் முடித்துவிட்டு வெளியே அமர்ந்திருந்த சமயம் அது - அவரிடம் நடந்ததை கூறினேன். அமைதியாகக் கேட்ட அவர் புன்சிரிப்போடு - 'போயிட்டு வாயேண்டா - கோயம்புத்தூர் நல்ல ஊர், உனக்குத் தெரியுமா - உம், போயிட்டு வா, போயிட்டு வா' என்று சொன்னார். சிறிது நேரம் கழித்து 'சென்னையிலே இருக்க ஆசைப்படுகிறேன் என்று சொல்லிப் பார், அவர்கள் முடியாது என்று சொன்னால், பிறகு வேறு வேலை பார்த்துக் கொள்ளலாம், என்ன?' - என்றார். இதைக் கேட்ட எனக்கு ஒரே ஆனந்தமாக இருந்தது.

ஆபீசில் என் விண்ணப்பத்தை மறுக்கவே, குருஜியிடம் எதற்கும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வேலையை விட்டு விடலாம் என்று நினைத்து குருஜியைப் பார்த்த போது அவர் அதற்கு - 'கோவைக்கு போகிறேன் என்று சொல், வேலை கிடைப்பதே கஷ்டமாக இருக்கும் இந்த காலத்தில் வேலையை விட்டு விட்டு வருவது உசிதம் அல்ல - அதனால் கோவைக்குச் செல்வதில் உனக்கு சம்மதம் என்று சொல்' என்றார். 'இரண்டு அல்லது மூன்று மாதங்களில் வந்து விடலாம், பார்ப்போமே'... என்றார். நானும் 30.1.95 மாலை கோவைக்கு செல்ல டிக்கட் வாங்கியாகிவிட்டது. மிகுந்த கவலையாக இருந்தது. குருஜியே

சொல்லிவிட்டதால் ஒன்றும் சொல்வதற்கில்லை. நமது ஸத் ஸங்கத்தைச் சேர்ந்த திரு. குமாரின் அக்கா கோவையில் தங்கி வருவதால் அங்கே நேரே இறங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. நானும் சென்னையிலிருந்து கிளம்பி கோவையில் முதலில் அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். மிகவும் அன்போடு இருந்தார்கள். மாலைப் பொழுது அன்று முடிந்தது. இரவு தூக்கம் வரவில்லை. குருஜியை விட்டு வந்துவிட்டோமே, என்ன இருந்தாலும் சென்னை போல் வராது என்ற நினைப்பே அதிகரித்தது. மறுபடியும் எப்படியாவது காலையில் உடனே சென்னை திரும்பிவிடவேண்டும் என்று இரவு முடிவு செய்து அவ்வாறே நானும் கிளம்பிவிட்டேன். ஏதோ செய்துவிட்டேனே யன்றி, வரும் வழியெல்லாம் குருஜி என்ன சொல்வாரோ என்ற பயம் இருந்து கொண்டேயிருந்தது.

3.2.95 காலை 9.30 மணிக்கு குருஜியை பார்க்கச் சென்றேன் - யாரோ சில பேர் குருநாதரை தரிசனம் செய்து முடித்து கிளம்பும் சமயம் என்னைப் பார்த்தார். 'என்னடா' - என்று கேட்பதுபோல் புருவங்களை மேலே உயர்த்திக் கேட்டார். அதற்கு நான், 'குருஜி, எனக்கு அங்கு இருக்க முடியவில்லை - நான் இங்கேயே உங்களுடன் இருக்கேனே குருஜி' என்று கூற, குருஜி ஒரு சில மணித்துளிகள் கண்களை மூடிக்கொண்டவாறு கண் விழித்து, எழுந்தார். பக்கத்தில் இருக்கும் திரு. சங்கரன் மாமாவிடம், 'இரண்டு டிக்கட் கோவைக்கு புக் செய்யுங்கள்' என்று சொன்னார். அவர் 'யார் பேருக்கு', என்று கேட்ட போது, 'எனக்கும் இவனுக்கும்' என்றார். பிறகு என்னைப் பார்த்து - 'இது எல்லாம் ஒத்து வராது, நான் உன்னுடன் வந்து இரண்டு நாள் தங்கி, உன்னை ஆபீஸில் சேர்த்துவிட்டு அப்புறம் தான் வரப்போகிறேன் - நீ, உன் துணியெல்லாம் தயார் செய்து கொள்- மாலை நான்கு மணிக்கு வந்து என்னைப் பார்' என்று சொன்னார். மாலையில் குருநாதரை தரிசனம் செய்யச் சென்றபோது, மறுநாள் காலை ஆறரை மணிக்கு கோவை எக்ஸ்பிரஸில் நாம் கிளம்பறோம் - 'நீ நேரே ஸ்டேஷனுக்கு வந்துவிடு' என்றார்.

குருநாதரே கொண்டுவிடப் போகிறார் என்றதும் எனக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது. காலையில் சீக்கிரம் எழுந்து நானும் என் அண்ணனும் சென்னை ஸ்டேஷனை அடைந்தோம். பகல் நேரப் பிரயாணம் என்பதால், குருநாதர் ஒரே இடத்தில் உட்கார வேண்டியிருந்தது. கோவை சென்று அடையும் வரை குருஜி ஒன்றுமே சாப்பிடவில்லை என்று எனக்கு வருத்தமாக இருந்தது. நான் கேட்டபோது, 'காலையிலேயே நான் சாப்பிட்டுத்தான் கிளம்பினேன் என்று எனக்கு சமாதானம் கூறி, நீ உனக்கு என்ன வேண்டுமோ அதை சாப்பிடு' என்றார். உண்மையில் அவர் சாப்பிடவேயில்லை என்று உள்ளுணர்வு சொல்வது போல் இருந்தது. கோவையில் ஒரு கல்லூரியில் ஸ்ரீராம் (திரு. சேதுராமனின் மகன்) படித்து வருவதால் அவர் குருஜியைக் காண ஸ்டேஷனுக்கே வந்துவிட்டார்.

கோவையில் ஒரு லாட்ஜில் தங்கினோம். ஸ்ரீராமுக்கு கோவை நல்ல பழக்கமிருந்த காரணத்தால், குருஜி அவரிடம், - 'இவனுக்கு தங்க, நல்ல லாட்ஜ் ஒன்று ஏற்பாடு செய்து கொடு, இங்கு, எங்கு நல்ல சாப்பாடு கிடைக்கும் என்பதையும் காண்பித்துக் கொடு' என்றார். நாங்கள் தங்கியிருந்த லாட்ஜின் பக்கத்திலேயே கீதா லாட்ஜில் தங்கி, உணவும் உண்ண ஏற்பாடு செய்யப்பட்டது. குருநாதர், 'என்னை கோவை ஆபீஸுக்கு போன் செய்து, (5.2.95) நாளைக்கு டியுட்டியில் சேருகிறேன் என்று சொல்லச்செய்து, 'ஆபீஸ் எங்கு இருக்கிறதோ போய் பார்த்துவிட்டு வா, நான் இங்கேயே இருக்கிறேன்' என்றார். நானும் அதே போல் பார்த்துத் திரும்பினேன்.

குருஜி எங்கும் வெளியே உணவு உட்கொள்ளாத காரணத்தால் குருஜிக்காக இரண்டு நாள் வரை போதுமான உணவுப் பொருட்கள் எடுத்து வந்திருந்தேன். குருஜி எனக்காக வந்து, பட்டினியாக இருக்க வேண்டுமா என்று நினைத்து, எனக்கு என் மேலேயே கோபமாக வந்தது. கட்டிக் கொடுத்தனுப்பிய உணவு பொட்டலங்களில் ஒன்றை அவிழ்த்துப் பார்த்தார். அப் பொட்டலத்தில் பூரி இருந்தது. அதை கொஞ்சமாக சாப்பிட்டு, காப்பியை எடுத்துக் கொண்டார்.

என்னைப் பார்த்து, 'சரி, நான் இன்று இரவே கிளம்புகிறேன்', 'ஸ்ரீராம் - உனக்கு சமயம் வரும்போதெல்லாம் வந்து இவனைப் பார்த்துக் கொள்' என்றார். 'உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கு?' என்று கேட்டு 'இந்தா, இதையும் வெச்சுக்கோ' என்று நிறைய பணம் கொடுத்தார். 'போதுமா, இன்னும் வேண்டுமா' என்று கேட்க, 'போதும் - குருஜி' என்று சொல்லி இவ்வாறு நினைத்தேன் - எந்த குருநாதர் தன் பக்தர்களை இப்படி அன்போடு கவனித்துக் கொள்ள முடியும்? தாய், தன் மகன் பள்ளிக்கூடம் போக மாட்டேன் என்று அடம்பிடிக்கையில், அவளே போய் பள்ளிக்கூடம் வரையில் கொண்டு விட்டு ஆசிரியரிடம் பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள் என்பது போல என் குருநாதர் - என் பிரபு - என்னை கவனித்துக் கொள்கிறார் என்பது தான் சத்தியம்.

நான் சென்னைக்கு வந்திருக்காவிட்டால், குருநாதர் இப்படி வந்து சிரமப்படும்படியாக, அன்றைக்கே கிளம்ப வேண்டியிருக்காது. ஆனால், அவரை சரியாக கவனித்துக் கொள்ளக்கூட எனக்கு தெரியவில்லை என்பதால் அவர் திரும்புகிறேன் என்று சொல்லும் போது நான் ஒன்றும் சொல்லவில்லை. குருநாதரை வழியனுப்புவதற்காக ஸ்டேஷனுக்குப் போனோம். குருநாதர் ஒரு நெருங்கிய நண்பன் போல என்னிடம் பேசிப் பழகுவதைப் பார்த்தால் என்னிடம் என்ன இருக்கிறது, பகவான் இவ்வளவு கருணாமூர்த்தியாக இருக்கிறானே என்று தான் சொல்ல வேண்டும். இது அவருடைய பரிபூர்ணமான கிருபையே தவிர, வேறொன்றுமில்லை.

பிறகு, குருநாதர் முன்பு சொன்னது போல் இரண்டே மாதங்களில் சென்னைக்குத் திரும்புமாறு செய்தார். மூன்று மாதங்கள் முடியும் முன்பே எனக்கு மறுபடியும் சென்னைக்கே வேலை மாற்றம் ஆனது. அதைப்பற்றி அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்)

**— Y.V. சரவண குமார்**

# ஸ்ரீ குருஜி - 1

ஸ்ரீ குருஜியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் தன் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றி, அவர் வாய் முகமாகவே கூறியவற்றை, தொகுத்து எழுதுகின்றேன்.

— **எஸ். ஜயராம்**

நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கடலூர். ஸ்ரீரங்கம் எப்படி அரசலாறு, காவேரி நதிகளின் நடுவில் உள்ளதோ, அது போல் கடலூர் பெண்ணையாறு, கருட நதிகளுக்கு நடுவில் உள்ளது. சமுத்ர கரையில் உள்ள ஒரு நகரம். 63 நாயன்மார்களில் சுந்தரர், சம்பந்தர், திருநாவுக்கரசர் என்ற அப்பர், மாணிக்க வாசகர் மிகவும் முக்கியமானவர்கள். இவர்களில் சிவ பெருமான் அப்பரை தடுத்தாட்கொண்ட திருத்தலமும் இதுதான். திருப்பாதிரிப்புலியூர் என்று பெயர் (கடலூர் Station பெயர் இதுதான்). சிவபெருமானின் பெயர் பாடலீஸ்வரர். அம்மனின் பெயர் பெரியநாயகி. பாதிரி மரம்தான் ஸ்தல வ்ருக்ஷம். ஆகவேதான் பாதிரிப்புலியூர் என்று பெயர். நகரத்தார்களால் கட்டப்பட்ட திருக்கோயில் இது.

திருப்பாதிரிப்புலியூரிலிருந்து சுமார் 3 KM தூரத்தில் திருவஹிந்திபுரம் என்ற வைஷ்ணவ ஸ்தலம் உள்ளது. வைஷ்ணவ சம்பிரதாயத்தில் வட கலை என்ற உட்பிரிவின் ஸ்தாபித ஆசார்யராக விளங்கும் ஸ்ரீ நிகமாந்த தேசிகன் பல காலம் வாழ்ந்த திருத்தலம். இந்தியாவில் ஹயக்ரீவருக்கு வெகு சில இடங்களிலேயே கோயில்கள் உள்ளன. அதில் மிகவும் பழமையானவைகளில் ஒன்று திருவஹிந்திபுரம். இங்கு

தேவநாதன் என்ற திருநாமத்தோடு பகவான் எழுந்தருளி யுள்ளான். மார்க்கண்டேய மஹரிஷிக்கு பிரத்யக்ஷம். இங்கு பகவான் திரிமூர்த்தியும் (சிவ, விஷ்ணு, பிரம்மா) தானே என்ற வ்யாஜ்யத்தில் காட்சி தருகின்றான் மார்க்கண்டேய மஹரிஷிக் காக. தலையில் ஸ்வாமிக்கு பிறை உண்டு, சங்கு சக்ரம் உண்டு. தாமரை புஷ்பமும் பகவான் தரித்துக் கொண்டுள்ளான். திருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாள், திருவிண்ணகரம் உப்பிலியப்பப் பெருமாள், தேவநாத ஸ்வாமி, மூவரும் சகோதரர்கள் என்ற வழக்குமுண்டு. தாயார் பெயர் ஹேமாம்புஜவல்லி. ப்ருகு புத்ரி என்பதால் பார்கவி என்ற திருநாமமும் உண்டு. கடில நதிக்கரையில் உள்ள ஆச்சர்யமான திருக்கோயில்.

கோயிலின் எதிர் புறம் சிறிய மலைமீது குதிரை முகத்துடன் ஸர்வ வித்தைக்கும் ஆதாரமாக லஷ்மி ஹயக்ரீவன் எழுந்தருளியுள்ளான். தேசிகன் இந்த மலை மீது அமர்ந்துதான் கருட மந்திரத்தை ஜபம் செய்து கருடனை சாக்ஷாத்கரித்தது. இந்த ஊரில் தான் அவர் உஞ்சவிருத்தி எடுத்து வாழ்ந்தது. இந்த ஊரில்தான் அநேக க்ரந்தங்களை வர்ஷித்தது. இங்குதான் ஸ்ரீ ஸ்துதி செய்து ஸ்வர்ண மழை பெய்யச் செய்தது. சரணாகதி என்ற சுலபமான மார்க்கத்திற்கு வித்திட்டது இங்கு இருந்து கொண்டு தான். புரட்டாசி மாதம் ஸ்ரவண நக்ஷத்திரத்தில் நடக்கும் தேசிகனின் அவதார உத்ஸவம் அவ்வளவு அழகாக இருக்கும். இந்த ஊரில் உள்ள ஸ்ரீ ராமர் மிகவும் அழகான மூர்த்தி. தேசிகன் இந்த ராமர் மீது ரகுவீர கத்யம் செய்துள்ளார். தேசிகன் உபாசனை செய்து வந்த ஹயக்ரீவர் சிறியவராக தேவநாத ஸ்வாமி சன்னதியில் இன்றைக்கும் எழுந்தருளி யுள்ளார்.

*(தொடரும்)*

# யுகதர்ம ஸ்தாபகர்கள் - 2

## 'ஸ்ரீ பகவன்னாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்'

'கலௌ கலுபவிஷ்யந்தி நாராயண பராயணா:' என்று கலியில் நிகழப்போகும் பாகவத தர்ம ப்ரசாரகர்களான மஹா புருஷர்களது அவதாரத்தை ஸ்ரீமத் பாகவதம் கலி பிறக்கும் முன்னமேயே கூறுகிறது. ஆயிரமாயிரம் ஸாதுக்கள் நம் பாரதத்தின் பல்வேறு தேசங்களில் தோன்றி, நாம ஸித்தாந்தத்தை முக்யமாகக்கொண்ட பாகவத தர்மத்தை மிகவும் அழகிய முறையில் ப்ரசாரம் செய்துள்ள போதிலும் 'ஜகத்குரு' என்ற பெருமையைத் தாங்கும் ஆதி சங்கரரே நம் தமிழ்நாட்டில் மீண்டும் ஸ்ரீ போதேந்திராளாக அவதரித்து நாம ஸித்தாந்தம் செய்து உலகைக் காப்பாற்றிய முறை ஒப்புயர்வற்றது. அம்மஹான் 'துளஸீ பரிமளத்துடன் அங்குரிப்பது போல்' அவதரித்ததைக் காண்போம்.

'நகரேஷு காஞ்சீ' என்று புகழ் பெற்று பலவிதத்திலும் உயர்வு பெற்று விளங்கும் காஞ்சீ மாநகரில் மண்டனமிச்ர அக்ரஹாரம் சிஷ்டர்களான ஸாதுக்களால் பொலிவு மிக்கது. வேதம், சாஸ்த்ரங்கள் பயின்று அவற்றை நெறி தவறாமல் அனுஷ்டித்து வருவதால் சூரிய பகவானே பூவுலகில் நடமாடுகின்றானோ என வியக்கத்தக்க தேஜஸ்வியான மஹான் ஒருவர் கண்வ கோத்ரத்தை சேர்ந்தவர். கேசவ பாண்டுரங்க யோகி என பெயர் பெற்றவர். ஸுகுணா எனும் ஸுகுணவதியான தர்ம பத்னியுடன் இல்லற தர்மத்தில் சிறந்து விளங்குபவராக அந்த அக்ரஹாரத்திற்கு சூடாமணியாக திகழ்ந்தார். ஆத்ம குணங்கள், அனுஷ்டானம், பக்தி இவற்றால் நிரம்பிய அந்த தம்பதிகளுக்கு புத்ர பாக்யமில்லாதது ஓர் குறை. அக்காலத்தில் காஞ்சீ பீடாதிபதியாக விளங்கிய 'ஆத்ம போதேந்திரர்' எனும் மஹானை ஆச்ரயித்து அவரது

க்ருபையால் அந்த தம்பதிகளுக்கு ஓர் ஸத்புத்ர ரத்ன லாபம் கிடைத்தது. புத்ர ஜனனத்தால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்த கேசவ பாண்டுரங்கர் ஜாத கர்ம ஸம்ஸ்காரத்தை விதிப்படி செய்து நிறைய தான தர்மங்களையும் செய்து குழந்தையின் ஜாதகம் அமானுஷ்யமான விசேஷங்கள் பொருந்தியிருப்பதைக் கண்டு வியந்து அந்தக் குழந்தைக்கு 'புருஷோத்தமன்' எனப் பெயரிட்டார். புருஷோத்தமன் தனது சமத்காரமான பால லீலைகளால் தம்பதிகளை ஆனந்த ஸாகரத்தில் ஆழ்த்தினான்.

ஒரு நாள் குரு தர்சனத்திற்காக ஸ்ரீ மடத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்த கேசவ பாண்டுரங்க யோகியுடன் தானும் வருவதாக அடம் செய்து கொண்டு 5 வயது புருஷோத்தமனும் கிளம்பி மடத்திற்கு வந்தான். தகப்பனார் வினயத்துடன் குரு தேவரை வந்தனம் செய்துவிட்டு கை கட்டி வாய் பொத்தி நிற்பதைப் பார்த்த புருஷோத்தமன், தானும் அவ்விதமே நான்கு முறை வந்தனம் செய்து கை கட்டி வாய் பொத்தி, ஓரத்தில் குரு தேவனை பார்த்தபடியே நின்றான். குரு தேவரின் கடாக்ஷம் அக்குழந்தைமீது விழுந்தது. அப்பாலகனிடம் ஸர்வ பிராணிகளையும் ரக்ஷிக்கும் திறமை இருப்பதைப் பார்த்து ஆனந்தமும் ஆச்சர்யமுமடைந்து, 'இவன் யார்'?'' என்றார். உடனே கேசவ பாண்டுரங்கர் தங்கள் அனுக்ரஹ பலத்தால் பிறந்த குழந்தை, தங்களுடைய சொத்துதான் என, ஸ்வாமிகள் அப்படியானால் இந்தப் பையனை மடத்துக்குக் கொடுப்பாயா? என உடனே கேட்டுவிட, குரு பக்தனான அந்த தந்தை குழந்தையை ஸ்வாமிகளிடம் ஒப்படைத்து வந்தனம் செய்து விடைபெற்று சென்றார்.

ஸ்ரீ மடத்திலேயே அக்ஷராப்யாஸம் ஆரம்பித்து உப நயனம், வேத சாஸ்த்ராப்யாஸங்கள் யாவும் புருஷோத்தமனுக்கு நடந்து முடிந்தது. அமானுஷ்ய குழந்தையின் மேதைக்கோர் எல்லையில்லாததைக் கண்ட வித்வான்கள் பலரும் இவரின்

பாண்டித்யத்தைப் போற்றியவாறு இருந்தனர். வித்தையின் பயன் வீண் வாதம் அல்ல என்பதையறிந்த ஸ்ரீ புருஷோத்தமர் ஸதா குரு ஸேவையிலும், ஆத்ம சிந்தனம், ஹரி பக்தியிலும் பொழுதைப்போக்கினார். இவரது ஸகா ஞான ஸாகரன் என்பவர். இருவரும் ஒருநாள், ஸர்வ சாஸ்த்ரங்களின் ஸாரம் நாம ஸங்கீர்த்தனம் என்பதையுணர்ந்து தங்கள் குரு ஸன்னிதியில் சபதம் எடுத்துக்கொண்டு ப்ரதி தினம் லட்சத்து எண்ணாயிரம் நாம ஜபம் செய்யவாரம்பித்தனர்.

ஸ்ரீ புருஷோத்தமனும், ஞான ஸாகரனும் ஞான பக்தி வைராக்ய பூர்ணர்களாக, 16 கலையுடன் பூர்ணமான சந்திரன் போல் சோபிக்கின்றவர்களாக பகவத் குணானுபவம் செய்து கொண்டும், பாகவத பரம ஹம்ஸ தர்மத்தில் நாட்டம் மிக்கவர்களாயும் மாய ஸுகங்களில் நாட்டமற்றவர்களாயும் மஹா தேஜஸ்வீகளாகத் திகழ்ந்தனர். புருஷோத்தமனிடம் அபார சாஸ்த்ர ஞானமும், பகவதனுபூதியும் கூடிய ஆசார்ய லக்ஷணம் பூர்ணமாக இருப்பதை குரு தேவர் கண்டார். ஆத்ம போதேந்திரரும் கலியில் ஆச்ரம தர்மங்கள் சரிவர அனுஷ்டிக்க முடியாத ஜனங்களிடம் இரங்கி, நாம கீர்த்தன ப்ரதானமான பாகவத தர்மத்தை ப்ரசாரம் செய்து வந்தார். இதற்கிடையில் புருஷோத்தமனது பெற்றோர்களும் பகவத் சரணமடைந்தனர். லோகத்தின் இயல்பையுணர்ந்த ஸ்ரீ புருஷோத்தமர் சிறிதும் பாதிப்படையாதவராய் குரு ஸேவை, சாஸ்த்ர விசாரம், நாம கீர்த்தனமிவற்றில் ஈடுபட்டு வந்தார்.

*(தொடரும்)*

— பரனூர் ஸ்ரீகாந்த சர்மா

❀ ❀ ❀

# ஸங்கீர்த்தன ஸப்தாஹம்

கலியுகத்தில் பகவானையடைய வெகு ஸுலபமானதும் எல்லோராலும் அனுஷ்டிக்கக் கூடியதுமான நாம ஸங்கீர்த்த னத்தை ஜீவநாடியாகக் கொண்டுள்ள குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன் 'ஸங்கீர்த்தன ஸப்தாஹம்' என 7 நாட்கள் - ஜூலை 17 முதல் 23 வரை - இடைவிடாது நாம ஸங்கீர்த்தனத்தை ஏற்பாடு செய்து நாம ருசியை அனைவருக்கும் ஊட்டியுள்ளது மிகப் பொருத்தம்தானே. 'ஜன்மானாம் மானுஷம் ஜன்ம' என மிகவும் அரிதான இந்த மனித சரீரம் நமக்குக் கிடைத்திருப்பதே ஸாரதமமான பகவானை அடைவதற்குத் தான். அவன் க்ருபையால் மட்டுமே அவனடி சித்திக்கும் என்றாலும், நமது முயற்சியையும் அவன் எதிர்பார்ப்பதால், நாமும் நமது பங்கிற்கு நம்மை ஸத் விஷயத்தில் ஈடுபடுத்திக் கொண்டு அவன் கருணைக்கு பாத்திரர்களாக வேண்டுமல்லவா! நம் குருநாதர் அழகாக இப்படி ஸப்தாஹத்தை ஏற்பாடு செய்து, அதன் மூலம் பாகவத தர்மத்தில் நின்று வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ள பாகவதோத்தமர்களையும் கௌர வித்து ஊக்குவித்து நமக்கும் அதனால் ஏற்படும் ஆத்ம ஸந்துஷ்டியை அனுபவிக்கச் சொல்லி கொடுக்கிறார். 'தாயினும் சாலப்பரிந்து' என்ற தொடருக்கும் மேலேயே அல்லவா குருஜி நம்மிடம் காட்டும் பரிவு! இந்த ஸப்தாஹம், மேற்கு மாம்பலம் அயோத்யா மண்டபத்தில் ஜூலை மாதம் 17-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை தமிழகத்திலுள்ள அனைத்து பாகவதர்களும் கலந்துகொண்ட கோலாஹல விழாவாக ப்ரும்மஸ்ரீ ஸ்ரீவாஞ்சியம் K. முரளீதர பாகவதர் மேற்பார்வையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

தினசரி காலை 7 மணியிலிருந்து பரனூர் ஸ்ரீ ஸ்ரீகாந்த சர்மா மற்றும் ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி இவர்களால்

பாகவத ஸப்தாஹ மூல பாராயணமும் 9 மணியிலிருந்து இரவு 12 மணி வரை மற்ற நாம ஸங்கீர்த்தன நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடந்த வண்ணம் இருந்த போதிலும் எப்போதும் மண்டபம் பூராவும் ஜனங்கள் இருந்து ரஸித்தது, அதுவும் பல வீட்டு வேலைகளுக்கிடையேயும் பெண்கள் திரளாக வந்து கலந்து கொண்டது, குருஜி நமக்கு ஏற்படுத்தியுள்ள நாம ருசிக்கு சான்றாகும்.

காலை 9 மணியளவில் ஸ்ரீ குருஜி தனது உபாஸனா மூர்த்தியான மாதுரி ஸகி ஸமேத ப்ரேமிக வரதனுக்கு அபிஷேக ஆராதனைகளும் தினம் ஒருவித மிக அழகான அலங்காரமும் செய்தது சிறப்பம்சம்.

**17.7.95 அன்று** காலை பாகவத பாராயணத்துடன் விழா துவங்கியது. 9 மணியளவில் ஸ்ரீவாஞ்சியம் H. ராம்சந்த்ர பாகவதர் தம் குழுவுடன் ஸம்ப்ரதாய அஷ்டபதி பஜனையை நிகழ்த்தினார். பல வருடங்களாக இதில் ஈடுபட்டு வருபவராதலால் அவரது இந்நிகழ்ச்சி ஸம்ப்ரதாயத்தை விட்டு வழுவாது சிறப்பாக அமைந்தது.

அன்று மாலை பங்களூரை சேர்ந்த ஸ்ரீ மாருதி ப்ரஸாத் என்னும் இளைஞர் மிக அருமையாக புரந்தரதாஸர் கீர்த்தனைகளை வர்ஷித்தார். நல்ல சாரீரமும் பக்தி பாவமும் இவரது நிகழ்ச்சியில் காணப்பட்டது. நிகழ்ச்சி முடிந்ததும் தம் ஸந்தோஷம் கட்டுக்கடங்காமல் போகவே பலர் மேடையருகே சென்று இவரை வாழ்த்தியும் அன்பளிப்புகள் அளித்தும் மகிழ்ந்தனர்.

இரவு 9 மணிக்கு ஸ்ரீவாஞ்சியம் பாகவதர் குழுவின் பஜனை, அபிநய திவ்ய நாமம் ஆகிய நிகழ்ச்சிகளை மக்கள் பெரிதும் ரஸித்தனர்.

**18-ந் தேதி** காலை திருவண்ணாமலை பிச்சை பாகவதர் அவர்களால் அஷ்டபதி பஜனை நடத்தப்பட்டது.

மதியம் 3-4 மணிவரை மருத்துவக்குடி ஸ்ரீ ஸ்வாமிநாதன் அவர்கள் பக்திப்பாடல்கள் பாடினார்.

5.30 - 7 மணி வரை திருவல்லிக்கேணி ஸ்ரீ பாண்டுரங்க பஜன மண்டலி'யை சார்ந்த ஸ்ரீ T.S. க்ருஷ்ணமூர்த்தி பாகவதர் அவர்கள் தம் குழுவினருடன் அபங்கம் மற்றும் பக்திப் பாடல்களை மிக அருமையாக பாடினார்.

இரவு 9 மணிக்கு திருவண்ணாமலை ஸ்ரீ பிச்சை பாகவதர் குழுவினரால் திவ்ய நாம ஸங்கீர்த்தனம் நிகழ்த்தப்பட்டது.

**19-ந் தேதி** காலை 9 மணிக்கு உடையாளூர் ஸ்ரீ கல்யாணராம பாகவதரின் ஸம்ப்ரதாய அஷ்டபதி பஜனை நடந்தது. மிகுந்த சாரீர வளத்துடன் கூடிய உயர்ந்த ஸங்கீத ஞானமும், ச்ருதி தாளங்களும் சேர்ந்த பஜனை, பக்தர்களின் செவிக்கும் மனதுக்கும் சிறந்த உணவாயிற்று.

பிற்பகல் 3 மணியளவில் ஸ்ரீ சாமி தண்டபாணி ஓதுவாரின் தேவார இசை நடைபெற்றது. பக்தி பாவத்துடனும் மிக அழகாகவும் பாடும், இவரது இசையை ஏற்கனவே நம் மிஷனின் பக்தர்கள் கேட்டிருந்தபடியால், கூடி ரஸித்து மகிழ்ந்தனர். நிகழ்ச்சியின் முடிவில் ஒரு திருப்புகழும் பாடினார்.

பிற்பகல் இரண்டாவது நிகழ்ச்சியாக செதலபதி ஸ்ரீ பால ஸுப்ரமண்ய பாகவதர் பக்திப் பாடல்களை இசைத்தார்.

இரவு 9 மணிக்கு ஸ்ரீ கல்யாணராமன் குழுவினரின் திவ்ய நாமம் இனிமையாக அமைந்தது.

**20-ந் தேதி** காலை ஸம்ப்ரதாய அஷ்டபதி பஜனை நிகழ்த்திய நூரணி ஸ்ரீ ராஜாமணி குழுவினரின் ஸம்ப்ரதாயத்தில் மற்ற குழுக்களை விட பாடும் விதத்தில் சற்று மாறுதல் இருந்ததாலும், எல்லோருக்கும் குரல் மிக அருமையாக இருந்ததாலும் பக்தர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்தது.

மதியம் 3 மணிக்கு மேற்கு மாம்பலம் முருகாஸ்ரமத்தை சேர்ந்த ஸ்ரீ S. சந்த்ரசேகரன் குழுவினர் திருப்புகழ் பாடல்களைப் பாடினர்.

இரவு திவ்ய நாம பஜனையில் ஸம்ப்ரதாயத்தில் மிகுந்த ஈடுபாடுடைய செதலபதி ஸ்ரீ சௌந்தரராஜ பாகவதர், ஜூனியர் கோபாலக்ருஷ்ண பஜனை மண்டலி, ஸ்ரீ மல்லிகார்ஜுன பாகவதர் தம் குழுவினருடன் பாடியது ஒரு பெரும் கூட்டத்தை தன்னை மறந்து ரஸிக்கச்செய்து அந்த இடத்தை விட்டு எழ முடியாதபடி இரவு 12 ஆனாலும் கட்டி வைத்தது உண்மை.

**21-ந் தேதி** வெள்ளி ஆடி வெள்ளியாதலால், அன்று முழு நிகழ்ச்சியையும் ஸ்த்ரீகளே நிகழ்த்தும்படி செய்திருந்தது. இது ஸ்ரீ முரளீதர பாகவதர் அவர்களின் சிறப்பான ஏற்பாடு.

காலை 9 மணி நிகழ்ச்சியில் மேல மாம்பலம் ஸ்ரீ ராம் மாதர் ஸங்கம் அஷ்டபதி பஜனை நிகழ்த்தினார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ அம்பாள் திவ்ய நாமம் நிகழ்ச்சியை ஸ்ரீமதி காந்திமதி ஸந்தானம் குழுவினர் நடத்தினர்.

மாலை திருச்சியை சேர்ந்த ஸ்ரீமதி சம்பா கல்குரா அவர்களின் அபங்க பஜனை மிக இனிமையாக இருந்தது. மீரா பஜனைகளும் பாடினார்.

ஆடி வெள்ளிக்கிழமை ஆதலால் ஸ்ரீ குருஜி மாலை ஸ்ரீ ராதையை மிக அருமையாக அலங்கரித்து அக்ராஸனம் கொடுத்து பூஜையை நடத்தினார். ஸ்ரீ க்ருஷ்ணனும் மிக சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு, ராதைக்கு அடுத்த படியில் எழுந்தருளப்பட்டிருந்தான்.

இரவு நிகழ்ச்சியில் மேற்கு மாம்பலம் ஸ்ரீ ராம் ஸமாஜ் மாதர் குழுவினரின் திவ்ய நாமம் இனிதே நடந்தது. கூடவே கும்மி கோலாட்டங்களும் நடைபெற்றன.

**22-ந் தேதி** காலை 9 மணிக்கு கோவை ஜயராமன் குழுவினரின் ஸம்ப்ரதாய பஜனை நடந்தது. இக்குழு அசாத்திய குரல் வளத்துடன் பாடியது ப்ரமிக்கத்தக்கதாக இருந்தது.

பிற்பகல் முதல் நிகழ்ச்சியாக பெங்களூர் ஹரிஹரன் அவர்கள் அற்புதமாக அபங்கங்கள் பாடினார்.

பிறகு இரண்டாவது நிகழ்ச்சியாக பொழிச்சலூர் ஸ்ரீ ரமணி பாகவதர் ரொம்ப பாவத்துடன் ஊத்துக்காடு ஸ்ரீ வெங்கடஸுப்பையரின் கீர்த்தனைகளைப் பாட, ஹைதராபாதைச் சேர்ந்த ஸ்ரீ ஈச்வர ப்ரஸாத் மிக நன்றாகவும் பாவத்துடனும் அபிநயித்தார். Mono acting ஆக பாட்டில் வரும் எல்லா பாத்திரங்களாகவும் உடனுக்குடன் மாறி அபிநயம் செய்தார். 'மரகத மணிமய சேலா' கீர்த்தனத்தில் 'மானித குணசீலா தயாளா' என்ற வாக்கியத்திற்கு குசேல உபாக்யானம் முழுக்க நெஞ்சைவிட்டு நீங்காக் காட்சியாக அமைந்தது. அதுவும் க்ருஷ்ணன் தனக்கு பாத பூஜை செய்கிறானே என்ற குசேலரின் தவிப்பு அதி அற்புதம். பக்தர்களின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. 'ஸ்வாகதம் க்ருஷ்ணா' வுடன் தொடங்கி 'ஆடாது அசங்காது வா'. என்று அழைத்து முற்றுப்பெற்றது மீண்டும் துவங்குவதற்காகவேதானே!

இரவு கோவை ஜயராமன் குழுவினரின் திவ்ய நாமம் இதில் ஸ்ரீராம திருக்கல்யாண கீர்த்தனைக்கு ஈச்வர ப்ரஸாத் அபிநயித்தபோது நெய்வேலி A.L. க்ருஷ்ணமூர்த்தி பாகவதர் இசைவாக அவ்வப்போது தேவைப்பட்ட போதெல்லாம் 'ராம ராம' சேர்த்து அபிநயித்தது ரொம்ப பாவபூர்வமாக இருந்தது. இதில் சீதை நாணிக்கோணி செல்வது போல அபிநயித்தது மக்களின் பெரு மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் கரகோஷத்தைப் பெற்றது.

நிகழ்ச்சியின் கடைசி நாளான **23-ந் தேதி** காலை பஜனையில் செதலபதி ஸ்ரீ ஸௌந்தரராஜ பாகவதர், ஸ்ரீ

மல்லிகார்ஜுன பாகவதர், மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் (இளைய பட்டம்) ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிகள், மருதாநல்லூர் ஸ்ரீ கண்ணன் பாகவதர் ஆகியோர் முக்ய பங்கேற்றார்கள். ஆனால் 7 நாட்களாகவும் இந்த இன்ப வெள்ளத்தில் திளைத்து பிரிய மனமில்லாமல் மற்ற நாட்கள் பாடிய பாகவதர்கள் பலரும் சேர்ந்து வந்து ஸம்ப்ரதாயம் பாடி மிக மிகச் சிறப்பாக ராதா கல்யாணத்தை நிகழ்த்தினர். ஒரு வார விழாவிற்கு, சிகரமாக அமைந்தது ராதா கல்யாணம் நிகழ்ச்சி. 'Doordarshan' & 'GEC' TV Coverage செய்தனர். எல்லோருடைய மிகுந்த ஈடுபாட்டினால் கால தாமதமாக முடிவுற்றாலும் பக்தர் திரள் அசையாமல் அமர்ந்திருந்து ரஸித்தனர். எல்லோர் மனத்திலும் இப்படி கோலாஹலமாக ஒரு வாரத்தை கழித்துவிட்டு நாளை என்ன செய்வோம் என்ற கவலை தோன்றிவிட்டது.

கல்யாணம் முடிந்து ஸ்ரீ குருஜி எல்லோருக்கும் தீர்த்த, குங்குமப் ப்ரஸாதங்கள் வழங்கி ஆசீர்வதித்தார். பிறகு அனைவருக்கும் ராதா கல்யாண ப்ரஸாதம் வழங்க ஸ்ரீநாத் கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்யாணம் முடிந்து எல்லோரும் ஆஹாரம் செய்து முடிப்பதற்கே 4.30 மணியாகிவிட்டபடியால் ஸ்ரீ யக்ஞராம சர்மாவின் ப்ரேமிக கீர்த்தனங்கள் சற்று தாமதமாக தொடங்கினாலும் எல்லோரும் இருந்து அவர் மிக பாவத்துடன் பாடியதை ரஸித்தனர். இதற்கிடையில் GEC TVயின் Coverage-ம் நடந்தது.

பிறகு மாலை இரண்டாவது நிகழ்ச்சியாக ஸ்ரீ A.K. ராமானுஜம் த்யாகராஜ கீர்த்தனைகளை மிக அற்புதமாகப் பாடினார்.

இரவு ஸ்ரீ ஆஞ்சனேய உற்சவம் ஸ்ரீ A.L. கிருஷ்ணமூர்த்தி பாகவதரால் மிக உருக்கமாகவும் அழகாகவும் நடத்தப்பட்டது.

இது முடிவுறும் தருவாயில் மிகப் பலத்த மழை பெய்தது. இந்த ஸப்தாஹம் ஸ்ரீ க்ருஷ்ணனால் மிகப் ப்ரியமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது என்பதை ஸூசகமாகச் சொல்லிற்று.

Hindu Priya Caterers-ஐச் சேர்ந்த ஸ்ரீ V. மணி, பாகவதர்களுக்குத் தேவையான ஆகார வசதிக்கு அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் இந்த ஏழு நாட்களுக்கும் மிகச் சிறப்பாக செய்திருந்தார்.

விழாவில் பங்கேற்ற சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பாகவதர்களுக்கும், ஸ்ரீ குருஜி மிஷன் சார்பில் சால்வை போர்த்தி சன்மானங்கள் அளித்து கௌரவிக்கப்பட்டது. இறுதியாக, இத்தனை நிகழ்ச்சிகளையும் மிக அழகாக ஏற்பாடு செய்த ஸப்தாஹம் Co-ordinator ஸ்ரீ முரளீதர பாகவதருக்கு (AG's Office) ஸ்ரீ குருஜி, சால்வையும் தங்கச் சங்கிலியும் அளித்து ஆசீர்வதித்தார்.

இப்பேர்ப்பட்ட ஸங்கீர்த்தன ஸப்தாஹம், எல்லா ஸம்ப்ரதாய பாகவத கோஷ்டிகளும் கலந்து கொண்டு இதுவரை இப்படி நடந்ததில்லை என்றும், இவ்வளவு மக்கள் கூட்டம் திரளாக வந்ததில்லை என்றும் கூடியிருந்தோர் பேசிக் கொண்டனர்.

ஸ்ரீ குருஜி நிகழ்த்திய ப்ரவசனத்தில் இந்த ஸப்தாஹத்தின் வெற்றிக்கும் சிறப்புக்கும் நம் முயற்சியோ ஸ்ரீ குருஜியின் ப்ரபாவமோ காரணம் என்று நினைக்கவேண்டாம். இது ஸ்ரீ ஹரி நாமத்தின் ப்ரபாவம் என்று வெகு அழகாகச் சொன்னார்.

— **திருமதி காஞ்சனா சங்கரன்**



'ஸங்கீர்த்தன ஸப்தாஹம்' வைபவத்தில் ஒரு நிகழ்ச்சி.



'ஸங்கீர்த்தன ஸப்தாஹம்' வைபவத்தில் மற்றொரு நிகழ்ச்சி.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 3

நம்முடைய கண்களுக்கு தெரிகின்ற இந்த உலகமானது ஸ்தூல பிரபஞ்சம். ஆனால் நாம் கண்களால் காண்கின்ற இந்த பிரபஞ்சத்தைத் தவிர வேறு ஒரு பிரபஞ்சமும் உண்டு. அதற்கு தான் ஸுக்ஷ்ம பிரபஞ்சம் என்று பெயர். ஆனால் நம்முடைய ஊனக் கண்களுக்கு அது தெரியாததால் ஸுக்ஷ்ம பிரபஞ்சம் இல்லை என்று கூறிவிடமுடியாது. பிறவிக் குருடனுக்கு எப்படி இந்த லோகமும் இதில் உள்ள விஷயங்கள் எல்லாம் தெரிவதில்லையோ, அதுபோல் தான் இதுவும். ஞானக்கண்கள் உடைய மஹாத்மாக்கள், இந்த ஸுக்ஷ்ம பிரபஞ்சத்தைக் காணக்கூடிய சக்தி உடையவர்கள். இன்று ஒரு குழந்தை பசி என்று வந்தால் அதற்கு அப்பொழுது ஆகாரம் போட்டால் அப்பொழுதுள்ள பசி மட்டும்தான் தீர்வு. ஆனால் அந்தக் குழந்தைக்கு ஏதோ ஒரு கல்வியோ தொழிலோ ஏற்பாடு செய்து கொடுத்தால் அவனுடைய வாழ்க்கை முழுவதற்கும் உபயோகமாக இருக்கும் அல்லவா? அது போல மனிதனுடைய இன்றைய கஷ்டங்களைப் பார்த்து அதற்கு மட்டும் தீர்வு காணாமல் அந்த கஷ்டங்கள் பின்னாலும் வராமல் இருக்க வழி செய்ய வேண்டும். நோய் வந்தால் நோய்க்கு மூலமான கிருமியைக் கண்டு வைத்தியம் செய்வது எவ்வளவு அவசியமோ அது போல நாம் படும் துயரங்களுக்கு மூலத்தை ஆராய வேண்டும்.

பல மதங்கள் மறு பிறவியை ஒத்துக் கொள்வதில்லை. அப்படியானால் படைக்கும் இறைவனுக்கு பாரபட்சம் ஏன் என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் நம் மதத்தில்

செய்த வினைகளுக்குத் தகுந்த மாதிரி பிறவி வருகிறது என்பதைக் கூறுகின்றோம்.

ஆகவே ஒருவருடைய ஜாதகத்தில் கிரஹங்களின் நிலைமைகள் அமைவது ஒரு குலுக்கல் முறையில் இல்லை. ஒருவனுடைய வினைகளுக்குத் தகுந்த மாதிரிதான் கிரஹங்கள் வந்து அமைகின்றனவே தவிர வேறு எப்படியும் இல்லை. ஆகவே கிரஹங்கள் நல்ல நிலைமையில் அமைய நாம் நல்ல கார்யங்களை செய்ய வேண்டும். இன்று கஷ்டப்படுகிறவர்களும் இனிமேல் கஷ்டப்படக்கூடாது. இன்று சுகமாக இருப்பவர்களுக்கு இந்த சௌக்யம் நீடூழி இருக்க வேண்டும். அதற்கும் நாம் ஏதாவது செய்ய வேண்டும். நம்முடைய வாழ்க்கை முறை எல்லாமே கிரஹங்களுடன் தொடர்புடையதாகத்தான் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்று ஒருவன் குருடனாகவோ, செவிடனாகவோ மன நிலை சரியில்லாதவனாகவோ இருந்தால், அவனுக்கு உதவி செய்வது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் மீண்டும் இது மாதிரி குழந்தைகள் பிறக்காமல் இருப்பதற்கு வழி செய்வது. ஆஸ்பத்திரிகள் எவ்வளவு கட்டினாலும் வியாதிகளை ஒழித்த பாடில்லை. அனாதை ஆச்ரமங்கள், ஆஸ்பத்ரிகள், பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆயினும் எங்கேயும் கொலை, கொள்ளை, ஊழல். நீதித்துறை, ராணுவம், விஞ்ஞானிகள், ஆன்மீகம் வரை ஊழல் வந்துவிட்டது. இதைத்தவிர எங்கு பார்த்தாலும் பூகம்பம், புயல், இயற்கையின் சீற்றங்கள் வேறு. இதற்கெல்லாம் காரணம் என்ன?

ஒரு குழந்தைக்கு சிறு வயதில் சத்யம், தர்மம், அஹிம்சை, கருணை, தேசப் பற்று இவற்றை போதிப்பதையெல்லாம் விட்டுவிட்டு கல்வியை மட்டும் போதிப்பதின் கோளாறுதான் இதற்குக் காரணம். விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தை மட்டும் பார்த்து சந்தோஷப்பட முடியாது. இது நம்முடைய நிம்மதியை குலைக்கும் அளவுக்கு இன்று கொண்டு போய்விட்டது. ஒரு

தாய், கர்ப்பமானவுடன் தன்னுடைய கருப்பையில் குழந்தையின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப்படுவாள். ஆனால் பத்து மாதத்திற்கு பிறகும் கூட அவளுடைய வயிறு பெரிதாகிக் கொண்டிருந்தால் அதுவே கவலையாகிவிடும். அதுபோல விஞ்ஞானம், வசதிகளை பெருக்கிய அளவைவிட ஆபத்தை பெருக்கி விட்டது. எங்கு பார்த்தாலும் வெடி குண்டுகள், ராக்ஷஸ துப்பாக்கிகள், அணு ஆயுதம் போன்றவைகள். ஆகவே இவற்றினால் மன நிம்மதி குலைந்து விடுகின்றது.

விஞ்ஞானிகளின் முடிவும் ஒரே மாதிரியாக இல்லை. ஒரு காலத்தில் உலகம் தட்டை என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பினார்கள். உலகம் உருண்டைதான் என்று கண்டுபிடித்த விஞ்ஞானிக்குக் கிடைத்த பரிசு கொலை தண்டனை. பின்புதான் ஏக மனதாக எல்லோரும் உலகம் உருண்டை என்று ஏற்றுக் கொண்டார்கள். விஞ்ஞானிகள் ஒரு காலத்தில் காபி குடித்தால் உடம்புக்கு கெடுதல், அதில் 'காபின்' என்கிற விஷம் உள்ளது என்றார்கள். இப்பொழுது விஞ்ஞானிகள், காபி உடம்புக்கு நல்லது என்று கூறுகின்றார்கள். இருதயத்துக்கு வரக்கூடிய நோய்களை தடுக்கின்றது என்கின்றார்கள். ஆகவே தீர்மானமான ஒரு முடிவும் இல்லை. இவர்களுடைய முடிவு அனுமானமே தவிர தீர்மானம் இல்லை. உதாரணமாக புகையிலை போட்டுக் கொண்டால் புற்று நோய் வரலாம் என்பது அனுமானமே தவிர தீர்மானம் இல்லை. ஏன் என்றால், புகையிலை உபயோகப்படுத்தாத எவ்வளவோ பேருக்குப் புற்று நோய் வருகின்றது. உபயோகப்படுத்துபவர் அநேகருக்கு வருவதும் இல்லை. இது போன்று அநேகம் சொல்லலாம். நான் அநேக வெளியிடங்களுக்கு நாமப் பிரச்சாரம் செய்யப்போகும் பொழுதெல்லாம், அநேக பெற்றோர்கள், 'எங்கள் வீட்டு பிள்ளைகள் புராணங்கள், சாஸ்திரங்களை நம்ப மாட்டேன் என்கிறார்கள், நிறைய கேள்வி கேட்கிறார்கள். அவர்கள்

Intellectuals (பகுத்தறிவு வாதிகள்) "ஏன் என்றால் நிறைய படித்திருக்கின்றார்கள் அல்லவா?" என்று ஏதோ பெருமையாகக் கூறி சந்தோஷப்படுவார்கள்.

அப்படி என்ன படித்து விட்டான் என்றால் B.A., B.Com., B.E., C.A. என்பார்கள். இது என்ன படிப்பு தெரியுமா? ஒரு பத்து புத்தகத்தைக் கொடுத்து அதில் என்ன விஷயம் இருக்கின்றது என்ற அர்த்தத்தை மனதில் வாங்காமல், அநேகமாக மனப்பாடம் செய்து சென்ற வருடம் வந்த வினாத்தாளைப் பார்த்து முக்கியமான கேள்விகளை மட்டும் படித்து, ஆசிரியர்களைக் காக்காப் பிடித்து, நிறைய டியூஷன் (Tuition) வைத்து, பல்கலைக் கழகம் (University) வரைக்கும் சென்று Mark-க்கு லஞ்சம் கொடுத்து, முடியாத பட்சத்தில் காப்பியும் அடித்து, குறைந்த பக்ஷமான மார்க் (Border Mark) வாங்கி தேர்வு பெற்றவர்களுக்கு பெயர் Intellectuals ஆகும்.

அப்படியேதான் டாக்டர்களுக்கோ, பொறியாளர்களுக்கோ, ஆடிட்டர்களுக்கோ படிக்கின்றார்களே, அவர்களுக்கு அந்தத் துறையில் பெரிய ஆர்வமா என்றால், அதெல்லாம் ஒன்றும் இல்லை. அந்த படிப்புப் படித்தால் பணம் சம்பாதிக்கலாம், சமூகத்தில் ஒரு அந்தஸ்து (Status) உள்ளது. நல்ல வரதட்சணையுடன் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளலாம். வெளிநாடுகளுக்குப் போகலாம். இதுதான் லட்சியம். இவர்கள் எப்படி Intellectuals ஆவார்கள்? இவர்கள் சந்தர்ப்பவாதிகள்.

அநேக இடங்களில் அறிவை வளர்க்கும் போட்டி வைத்து எல்லோருக்கும் பாராட்டும் பரிசும் தருகின்றார்கள். யாருக்கு தெரியுமா பரிசு? உலகத்தில் உள்ள சினிமா நடிகர்கள், கிரிக்கெட் விளையாடுபவர்கள், இவர்களை அதிகமாக தெரிந்து வைத்துள்ளவர்களுக்கு பெயர் அறிவாளிகள். சபாஷ்!

அப்படியேதான் Intellectuals என்கிறார்களே இவர்கள் எப்படி வாழ்வார்கள் தெரியுமா? காலையில் 8 மணிக்கு முன்பு எழுந்திருக்க மாட்டார்கள். பல் தேய்க்காமல் காபி சாப்பிடுவார்கள். குளித்துவிட்டு, தனக்குத்தானே சவரம் செய்து கொண்டு, பிறகு கையில் ஒரு தட்டை வைத்துக் கொண்டு சாப்பிடுவார்கள். 10 நாட்கள் போட்டுக் கொண்டு, தோய்க்காத உள் ஆடைகளையும் வெளி ஆடைகளையும் போட்டுக் கொண்டு மேலுக்கு வெளி நாட்டு வாசனைத் திரவியங்கள் (scent) எல்லாம் போட்டுக் கொண்டு ஆபீஸுக்கோ, தொழிலுக்கோ சென்று, கிடைத்த போதெல்லாம் கண்டதைத் தின்று கொண்டு, பீடா போட்டுக் கொண்டு, புகைப்பிடித்து, ரோட்டில் ஒரு வாளியிலேயே (Bucket) எல்லோருடைய தட்டுகளை அலம்பி சுத்தம் செய்யும் இடங்களிலும் சாப்பிடு வார்கள். பரிமாறுபவனைப் (serve) பார்த்தால் அவன் குளித்துப் பத்து நாட்கள் இருக்கும். உடம்பில் அநேக வியாதிகள் இருக்கும். மொத்தத்தில் அடிப்படையான சுகாதார வசதிகள் கூட இல்லாத இடங்களில் எல்லாம் உண்டு, ஆளுக்குத் தகுந்த மாதிரி பேசி, ஏமாற்றி, பொய் சொல்லி, லஞ்சம் வாங்கி மாலை ஆனவுடன் க்ளப்புக்குச் சென்று, குடித்து, சீட்டு விளையாடி வீட்டிற்கு வந்தவுடன் அழுக்கான லுங்கி கட்டிக் கொண்டு டி.வி. பார்த்து, மன விகாரங்களைத் தூண்டும் மட்டரகமான சஞ்சிகை களைப் படித்து கண்ட நேரத்தில் தூங்கி வாழ்பவர்களுக்கு பெயர் என்ன தெரியுமா? Intellectuals.

காலத்தின் கொடுமை என்ன பார்த்தீர்களா? நாம் அவர்களைப் பார்த்து பரிகசிக்க வேண்டியிருக்க, நாம் அவர்களுக்கு பரிகாசப் பொருட்களாக போய் விட்டோம். இப்படிப்பட்ட Intellectuals-களுக்கு பதில் சொல்ல வேண்டுமா என்ன? நம்முடைய மஹரிஷிகளுடைய மேதா விலாசத்துக்கு முன், ஒரு கால் தூசுக்கு இவர்கள் சமமாகமாட்டார்கள்.

நம்முடைய ஜோதிஷ கிரந்தங்களை எடுத்துப்பார்த்தால் அவர்களுடைய வானியல் சாஸ்திர அறிவும், எவ்வளவு துல்லியமாக அவர்கள் கணித அறிவு பெற்றுள்ளார்கள் என்பதும் விளங்கும். வேதாந்த சாஸ்திரங்களை எடுத்துப்பார்த்தால் அவர்களின் பரமார்த்திக ஞானம் வெளிப்படும். தர்க்க சாஸ்திரங்களின் கிட்டே இன்றைய Intellectuals-களில் ஒருவர் கிட்டேகூட போக முடியாது. காவ்யங்களை படித்துப் பார்த்தால் அவர்களின் யதார்த்தமான அறிவு புலப்படும். வேதாந்தப் பிரச்சாரம் செய்வதைக் காட்டிலும், தர்க்க மதப்பிரச்சாரம் செய்தால் நம்முடைய மூதாதையர்களின் புத்தி சக்தி ஜனங்களுக்கு புரிய வரும். வேத நூல்களை எடுத்துப் பார்த்தால் விஞ்ஞான அறிவு (ராக்கெட் செய்வது உள்பட) புரியவரும்.

ஆனால் அதையெல்லாம் புரிந்து கொள்ளவோ தெரிந்து கொள்ளவோ நமக்கு ஆர்வமும் இல்லை, நேரமும் இல்லை. ஆகவே எதைப் பற்றியும் தெரியாமல் பேசுவதற்கு பெயர் Intellectuals இல்லை, முட்டாள்கள். நம்முடைய எண்ண அலைகளால் பிரபஞ்சம் (cosmos) பாதிக்கப்பட்டிருப்பதால்தான் உலகத்தில் இவ்வளவு கோளாறுகள் ஏற்படுகின்றன. ஒருவன் செய்யும் கார்யங்களை பிரகிருதி பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றது. ஒருக்காலும் யாரும் பாவ புண்ணியங்களிலிருந்து தப்ப முடியாது. பாபம் செய்தவன் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். புண்யம் செய்தவன் சுகத்தை அனுபவித்தே ஆக வேண்டும். ஆகவேதான் வியாஸரும் சர்வ சாஸ்திரத்தின் ஸாரம் என்ன என்பதை ரத்தின சுருக்கமாக தன்னுடைய சீடர்களுக்கு சொல்லும் பொழுது எப்பாடு பட்டும் புண்ணியத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

ஆகவே நம்மிடமிருந்து நல்ல எண்ணங்கள் வர வேண்டும்; நல்லதையே நினைக்க வேண்டும்; நல்லதையே பேச

வேண்டும். ஒழுக்கமான முறையில் வாழ வேண்டும். நாம் யாவர்க்கும் உபகாரம் பண்ணா விட்டால்கூட பரவாயில்லை. யாருடைய மனமும் புண்படும்படி பேசவோ, நடந்து கொள்ளவோ கூடாது. யாருக்கும் உபத்திரவம் தரக்கூடாது. ஒருக்கால் இந்திரியங்களுக்கு வசப்பட்டு தவறு செய்து விட்டால் கூட, அதை நியாயப்படுத்தாமல் அதற்காக வருந்த வேண்டும். மீண்டும் அது மாதிரி நேராமல் இருக்க பகவானை பிரார்த்திக்க வேண்டும்.

நாம் தனியாக ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு செய்யும் பிரார்த்தனைகளும், ஸங்கீர்த்தனமும், பாராயணமும், பூஜைகளும், யாருக்கும் தெரியாவிட்டாலும்கூட பரவாயில்லை. Cosmos (பிரபஞ்சம்)ஐ சுத்தம் செய்து, நமக்கும் க்ஷேமத்தைக் கொடுத்து லோகத்துக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும்.

தொகுப்பு : **ஸ்ரீ முரளீதர தாஸன்**

# செய்திகள்

## August 4 முதல் 10 வரை

சென்னை கே.கே.நகர் அம்மன் கோவிலில், கே.கே.நகர் ஆஸ்தீக சமாஜ் நடத்திய உத்சவத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டு 'பக்த விஜயம்' என்ற தலைப்பில் ப்ரவசனம் நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சி நடந்த அந்த ஏழு நாட்களிலும் திரளாக பக்த ஜனங்கள் வந்திருந்து கதா ச்ரவணம் செய்து ஆனந்தித்தார்கள்.

★ ★ ★

## August 12 அன்று

தஞ்சை ஜில்லா புலியூர் கிராமத்தில் நடைபெற்ற ஸ்ரீ சீதா கல்யாண வைபவத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முன்னதாக, கிராமத்தில் பல கிரஹங்களில் பூரண கும்ப மரியாதையுடன் ஸ்ரீ குருஜியை வரவேற்றார்கள்.

சீதா கல்யாண வைபவத்துக்கு முந்தின நாள் (11-ந் தேதியன்று) இரவு ஸ்ரீ குருஜி 'ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்' பற்றி உபன்யாசம் செய்தார்கள். கிராமத்து சுற்று வட்டாரத்திலிருந்து மஹா ஜனங்கள் வந்திருந்து ப்ரவசனம் கேட்டு மகிழ்ந்தார்கள்.

★ ★ ★

## August 14 அன்று

சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீ அயோத்யா மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ கோகுலாஷ்டமி வைபவத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டார். அன்றிரவு நடந்த நிகழ்ச்சியில்

ஆண்டு மலரை வெளியிட்டு, 'ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்' பற்றிய உபன்யாசமும் நிகழ்த்தினார்கள்.

★ ★ ★

## August 18 முதல் 28 வரை

சென்னை தாம்பரம் - ஸ்ரீபெரும்புதூர் பஸ் மார்க்கத்தி லுள்ள மாஹான்யம் கிராமத்தில் அமைந்துள்ள 'மதுரபுரி' ஆஸ்ரமத்தில் 'ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி' விழா விமரிசையாக நடந்து முடிந்தது.

பிரம்மோத்ஸவம் நடந்த 10 நாட்களிலும், ப்ரபோதனம், திருமஞ்சனம் நடத்தி, ரம்மியமான அலங்காரத்துடன் மாதுரி ஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதன் உற்சவமூர்த்தியை காலையில் பல்லக்கிலும் இரவில் வெவ்வேறு வாஹனங்களிலும் புறப்பாடு செய்யப்பட்டது.

இரவு புறப்பாட்டிற்குப் பிறகு விசேஷ தினங்களில் திவ்ய நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

தினமும் மாலை 5 முதல் 6-30 வரை பரனூர் ஸ்ரீகாந்த சர்மா அவர்களால் 'ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு சரித்திரம்' உபன்யாசம் நடைபெற்றது. அனைத்து பக்த ஜனங்களும், 10 தினங்களும் ஆஸ்ரமத்திலேயே தங்கி இருந்து, வைபவங்களில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வைபவத்தின் இறுதி நாளன்று (27 அன்று) ஸ்ரீ ராதா கல்யாண வைபவமும் 28-ந் தேதி திங்கள் அன்று விடையாற்றி உத்சவமும் நடைபெற்று பிரம்மோத்ஸவம் மங்களகரமாக நடந்து முடிந்தது.

பிரம்மோத்சவம் பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.



ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி பிரம்மோத்சவத்தில்

ஸ்ரீ கோவிந்த பட்டாபிஷேக வைபவத்தில்

ஸ்ரீ குருஜி திருமஞ்சனம் செய்யும் காட்சி

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## செப்டம்பர் 1 முதல் 5 வரை

ஸ்ரீ குருஜி ஹைதராபாத் விஜயம். கீழ்க்கண்ட விலாஸத்தில் தங்கி இருப்பார்.

**N. Ravichandran and Srilatha**
Shyam Apartments,
6-3-563/F, Erramanzil,
Hyderabad 500 482
Telephone No. 315150 Office : 392758
(Third left lane on the road
from KCP Guest House to Krishna Oberoi)

★ ★ ★

## அக்டோபர் 16 முதல் 23 வரை

சென்னை ஸ்ரீ ரமண கேந்திரம் சார்பில் ஸ்ரீ குருஜி சென்னை மயிலை ஆர்.ஆர். சபாவில் ஸ்ரீ ரமண மஹரிஷியின் 'அருணாசல அக்ஷர மணமாலை' - உபன்யாஸம் நிகழ்த்துவார்கள். நேரம்: மாலை 7 முதல் 8-30 வரை.

★ ★ ★

மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. Dis. 2032/95 Regd. No. TN/MS/(S)1698

Single Copy Rs. **5/-** Annual Subs. **Rs. 60/-**

வேணு : 1 செப்டம்பர் 1995 கானம் : 3


மதுரமுரளி மாத இதழிற்கு சந்தாதாரர்கள் வரவேற்கப் படுகிறார்கள். வருஷச் சந்தா ரூ.60/- தனிப் பிரதி ரூ.5/-

டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

**மதுரமுரளி**
**V. சங்கரன்,**
5/3, MIG Flats,
பி.டி. ராஜன் ரோடு,
கே.கே. நகர், சென்னை 600 078

என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

மணியார்டர் மூலமும் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

மிஷன் சார்பில் "சாந்தீபனி குரு குலம்" என்ற டிரஸ்டின் கீழ் சாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடை களுக்கு வருமான வரி விலக்கு உண்டு. பாடசாலைக்கு வித்யார்த்திகளையும், 'மதுரமுரளி' இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்தும், விளம்பரங்களை அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar